## 5. மயிலாக மாறிய வான்கோழி.

ஒரு கிராமம், அங்கே அதிகமான வயல்கள் இருந்தன.
வயல்களில் நிறைய மயில்கள் வாழ்ந்தன.
மழை வரும் போதெல்லாம் அவை, தோகையை விரித்து ஆடும்.
மயில்களின் அழகை மக்கள் புகழ்வார்கள்.
அவ்வூரில் ஒரு வான்கோழிக்கு இது வருத்தமாக இருந்தது.
தான் மயிலைப் போல அழகாக இல்லையே என்று வருந்தியது.
ஒரு நாள் அதுவும் சில மயில் இறகுகளைத் தன் இறகுகளுடன் சொறுகிக் கொண்டது.
மயிலைப் போல உடலை அசைத்து ஆடியது, சத்தமும் போட்டது.
இதைக் கண்ட மற்ற பறவைகள் சிரித்தன, மக்கள் கேலி செய்தனர்.
அப்போது வான்கோழி மிகவும் கவலைப் பட்டது.
அங்கே ஒரு மயில் வந்தது.
"வான்கோழி! ஏன் கவலைப் படுகிறாய்? இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அழகையும் திறமையையும் தந்திருக்கிறார். அதை உணர்ந்து கொள். என்ன தான் நாங்கள் அழகாக இருந்தாலும் எங்களை வீட்டில் வளர்ப்பதில்லையே? காட்டிலும் வயலிலும் மற்றவர்களுக்கு பயந்து தானே வாழ்கிறோம்?" என்று சொன்னதைக் கேட்ட வான்கோழி அறிவுடன் கவலை விட்டு சந்தோஷமாக வாழ்ந்தது.